**BHARATHIYAR UNIVERSITY, COIMBATORE – 641046**

UNDER GRADUATE DEGREE PROGRAMMES (CBCS SEMESTER PATTERN)

( For the students admitted during the academic year 2014 – 2015 and onwards)

**பாடத்திட்டம் - முதற்பருவம் - தாள் 1**

(2014 - 15 ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது (செய்யுள் . சிறுகதை , இலக்கிய வரலாறு, இலக்கணம் , மொழிபெயர்ப்பு)

அலகு 1 **நாட்டுப்பற்று**

1. பாரதியார் - முரசு (மாற்றமில்லை)
2. பாரதிதாசன் - அழகின் சிரிப்பு
3. நாமக்கல் கவிஞர் - தமிழ்வழி அரசு
4. ஆரூர் தமிழ்நாடன் - கரிக்கிறது தாய்ப்பால்
5. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ___ஒற்றுமை , இலக்கியமும்மணி

அலகு 2 **சமூகம்**

| | | |
|---|---|---|
| 6. பெரியார் பிறவாதிருந்தால் | - புலவர் குழந்தை | மாற்றமில்லை |
| 7. எல்லாம் நானே | - கண்ணதாசன் | மாற்றமில்லை |
| 8. காகிதப்பூக்கள் | - நா. காமராசன் | மாற்றமில்லை |
| 9. மரங்கள் | - மு. மேத்தா | |
| 10. ரிஷி கவிதைகள் | - முடிந்தது , இங்கே, படைப்பு, மதி, தாகம் | |

அலகு -3 **சிறுகதை "அப்பத்தாளும் ஒரு கல்யாணமும்"**

மா. நடராசன். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

அலகு - 4 **இலக்கிய வரலாறு** - ( பாடத்திட்டத்தைத் தழுவியது)

1. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்
2. சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்
3. படிமம் , குறியீடு - பற்றிய விளக்கங்கள்

அலகு - 5 மொழி பெயர்ப்பு , பொதுப்பகுதி, அலுவலகப்பகுதி - ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மொழிபெயர்த்தல்.

## முதற்பருவம்

## வினாத்தாள் அமைப்பு

நேரம் 3 மணி மொத்த மதிப்பெண்கள் 75

### பிரிவு -அ

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக 10 x 1 = 10

### பிரிவு -ஆ

இரு பக்க அளவில் விடையளி

5 x 5 = 25

செய்யுள் - 3 வினாக்கள்
சிறுகதை - 1 வினா
இலக்கிய வரலாறு -- 1 வினா

### பிரிவு - இ

கட்டுரை வடிவில் விடை எழுதுக 5 x 8 = 40

செய்யுள் - 2 வினாக்கள்
சிறுகதை -1 வினா
இலக்கிய வரலாறு -1 வினா
மொழி பெயர்ப்பு - 1 வினா

குறிப்பு : ஆ. இ. பிரிவுகளில் வினாக்கள் ‘ இது’ அல்லது ‘அது’ என்ற வகையில் அமைதல் வேண்டும்.

அ பிரிவு வினாக்கள் ஐந்து அலகுகளிலிருந்தும் கேட்கப்படல் வேண்டும்.

# நாட்டுப்பற்று

## *பாரதியார்*

சி.சுப்பிரமணிய பாரதி 1882-இல் பிறந்தார். 1893-ஆம் ஆண்டு "பாரதி" பட்டம் பெற்றார். பாரதி தமிழ்ப் பற்றும், தேசப்பற்றும், சீர்திருத்த வேகமும், பெண்மைக்கு முதன்மையும், எளிமையும், இனிமையும் கொண்டு இருபதாம் நூற்றாண்டுக் கவிதைப் பரம்பரையை உருவாக்கியர். இவருக்குப் பின்னர் தமிழ்க் கவிதையின் உள்ளடக்கம் புத்தாக்கம் பெற்றது.

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனிசிறந்தவை எனத் தேசபக்திக்கு முதல் வரிசை அளித்து மகிழ்ந்தவர்.

### *முரசு*

1) ஊருக்கு நல்லது சொல்வேன் -எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன்
சீருக் கெல்லாம் முதலாகும் - ஒரு
தெய்வம் துணை செய்ய வேண்டும்.

2) ஒற்றைக் குடும்பந் தனிலே - பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை
மற்றைக் கருமங்கள் செய்தே -மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை,

3) ஏவல்கள் செய்பவர் மக்கள் - இவர்
யாவரும் ஓர்குலம் அன்றோ?
மேவி அனைவரும் ஒன்றாய் -நல்ல
வீடு நடத்துதல் கண்டோம்.

4) சாதிப் பிரிவுகள் சொல்லி - அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்
நீதிப் பிரிவுகள் செய்வார்-அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்.

5) சாதிக் கொடுமைகள் வேண்டாம் அன்பு
தன்னில் செழித்திடும் வையம்
ஆதர வுற்றிங்கு வாழ்வோம் - தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்.

6) பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக் குள்ளே சிலமூடர் - நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்.

7) கண்கள் இரண்டினில் ஒன்றைக் -குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்க ளறிவை வளர்த்தால் -வையம்
பேதமை யற்றிடுங் காணீர்

8) தெய்வம் பலபல சொல்லிப் -பகைத்்
தீயை வளர்ப்பவர் மூடர்
உய்வ தனைத்திலும் ஒன்றாய் - எங்கும்
ஓர்பொரு ளானது தெய்வம்.

9) தீயினைக் கும்பிடும் பார்ப்பார்-நித்தம்
திக்கை வணங்கும் துருக்கர்
கோயிற் சிலுவையின் முன்னே-நின்று
கும்பிடும் யேசு மதத்தார்.

10) யாரும் பணிந்திடும் தெய்வம் -பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று -இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்.

11) வெள்ளை நிறத்தொரு பூனை -எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை-அவை
பேருக் கொருநிற மாகும்.

12) சாம்பல் நிறமொரு குட்டி-கருஞ்
சாந்து நிறமொரு குட்டி
பாம்பு நிறமொரு குட்டி-வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி

13) எந்த நிறமிருந் தாலும் -அவை
யாவும் ஒரேதர மன்றோ?
இந்த நிறம்சிறி தென்றும்-இஃது
ஏற்ற மென்றும் சொல்லலாமோ.

14) வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்-அதில்
மானுடர் வேற்றுமை யில்லை
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம்-இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்.

15) நிகரென்று கொட்டுமுரசே! இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம்
தகரென்று கொட்டு முரசே-பொய்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்.

16) அன்பென்று கொட்டு முரசே-அதில்
ஆக்கமுண் டாமென்று கொட்டு
துன்பங்கள் யாவுமே போகும்-வெறுஞ்
சூதுப் பிரிவுகள் போனால்

17) அன்பென்று கொட்டு முரசே-மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும் -இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்

18) உடன்பிறந் தார்களைப் போல -இவ்
வுலகில் மனிதரெல் லாரும்
இடம்பெரி துண்டுவை யத்தில் - இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்?

19) மரத்தினை நட்டவன் தண்ணீர் -நன்கு
வார்த்தே ஓங்கிடச் செய்வான்
சிரத்தை யுடையது தெய்வம்-இங்கு
சேர்ந்த உணவெல்லை யில்லை

20) வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர் -இங்கு
வாழும் மனிதரெல் லோர்க்கும்
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்-பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்

## அழகின்சிரிப்பு - பாரதிதாசன்

### அழகு

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்!
கடற்பரப்பில், ஒளிப்புனலில் கண்டேன்!அந்தச்
சோலையிலே,மலர்களிலே, தளிர்கள் தம்மில்,
தொட்டஇடம் எலாம்கண்ணில் தட்டுப் பட்டாள்!
மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள்! ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனில்அந்த `அழகெ`ன்பாள் கவிதை தந்தாள்.

சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள்;
திருவிளக்கில் சிரிக்கின்றாள்; நாரெ டுத்து
நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வ ளைவில்
நாடகத்தைச் செய்கின்றாள்; அடடே செந்தோள்
புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும்
புதுநடையில் பூரித்தாள்; விளைந்த நன்செய்
நிறத்தினிலே என்விழியை நிறுத்தினாள்; என்
நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்.

திசைகண்டேன், வான்கண்டேன்,உட்புறத்துச்
செறிந்தனவாம் பலப்பலவும் கண்டேன். யாண்டும்
அசைவனவும் நின்றனவும் கண்டேன். மற்றும்
அழகுதனைக் கண்டேன் நல் லின்பங் கண்டேன்.
பசையுள்ள பொருளிலெலாம் பசையவள் காண்!
பழமையினால் சாகாத இளையவள் காண்!
நசையோடு நோக்கடா எங்கும் உள்ளாள்!
நல்லழகு வசப்பட்டால் துன்ப மில்லை.

## கடல்

### மணல், அலைகள்

ஊருக்குக் கிழக்கே உள்ள
பெருங்கடல் ஓர மெல்லாம்,
கீரியின் உடல் வண் ணம்போல்
மணல் மெத்தை ; அம்மெத் தைமேல்
நேரிடும் அலையோ, கல்வி
நிலையத்தின் இளைஞர் போலப்
பூரிப்பால் ஏறும் ;வீழும்:
புரண்டிடும்: பாராய் தம்பி.

### மணற்கரையில் நண்டுகள்

வெள்ளிய அன்னக் கூட்டம்
விளையாடி வீழ்வ தைப்போல்
துள்ளியே அலைகள் மேன்மேல்
கரையினிற் சுழன்று வீழும் !
வெள்ளலை, கரையைத் தொட்டு
மீண்டபின் சிறுகால் நண்டுப்
பிள்ளைகள் ஓடி ஆடிப்
பெரியதோர் வியப்பைச் செய்யும்.

### புரட்சிக்கப்பால் அமைதி

புரட்சிக்கப் பால்அ மைதி
பொலியுமாம். அதுபோல், ஓரக்
கரையினில் அலைகள் மோதிக்
கலகங்கள் விளைக்கும்: ஆனால்
அருகுள்ள அலைகட் கப்பால்
கடலிடை அமைதி அன்றோ!
பெருநீரை வான்மு கக்கும்:
வான்நிறம் பெருநீர் வாங்கும்!

### கடலின் கண்கொள்ளாக் காட்சி

பெரும்புனல் நிலையும், வானிற்
பிணைந்தஅக் கரையும், இப்பால்
ஒருங்காக வடக்கும் தெற்கும்
ஓடு நீர்ப் பரப்பும் காண
இருவிழிச் சிறகால் நெஞ்சம்
எழுந்திடும்: முழுதும் காண
ஒருகோடிச் சிறகு வேண்டும்
ஓகோகோ எனப்பின் வாங்கும்.

### கடலும் இளங் கதிரும்

எழுந்தது செங்க திர்தான்
கடல்மிசை! அடடா எங்கும்
விழுந்தது தங்கத் தூற்றல் !
வெளியெலாம் ஒளியின் வீச்சு!
முழங்கிய நீர்ப்ப ரப்பின்
முழுதும்பொன் னொளி பறக்கும்.
பழங்கால இயற்கை செய்யும்
புதுக்காட்சி பருகு தம்பி!

### கடலும் வானும்

அக்கரை, சோலை போலத்
தோன்றிடும் ! அந்தச் சோலை,
திக்கெலாம் தெரியக் காட்டும்
இளங்கதிர்ச் செம்ப ழத்தைக் !
கைக்கொள்ள அம்மு கில்கள்
போராடும் ! கருவா னத்தை
மொய்த்துமே செவ்வானாக்கி
முடித்திடும் ! பாராய் தம்பி!

### ஆல்

### அடி – கிளை, காய், இலை, நிழல்

ஆயிரம் கிளைகள் கொண்ட
அடிமரம் பெரிய யானை!
போயின மிலார்கள் வானில் !
பொலிந்தன பவளக் காய்கள் !
காயினை நிழலாற் காக்கும்
இலையெலாம், உள்ளங் கைகள் !
ஆயஊர் அடங்கும் நீழல்,
ஆலிடைக் காணலாகும் !

### விழுதும் வேரும்

தூலம்போல் வளர்கி ளைக்கு
விழுதுகள் தூண்கள் ! தூண்கள்
ஆலினைச் சுற்றி நிற்கும்
அருந்திறல் மறவர் ! வேரோ
வாலினைத் தரையில் வீழ்த்தி
மண்டிய பாம்பின் கூட்டம் !
நீலவான் மறைக்கும் ஆல்தான்
ஒற்றைக்கால் நெடிய பந்தல் !

**பச்சிலை, இளவிழுது**

மேற்கிளை யின்வீழ் தெல்லாம்
மின்னிடும் பொன்னி ழைகள் !
வேற்கோல்போல் சிலவீழ் துண்டாம் !
அருவியின் வீழ்ச்சி போலத்
தோற்றஞ்செய் வனவும் உண்டு!
சுடர்வான்கீழ்ப் பச்சிலை வான்
ஏற்பட்ட தென்றால், வீழ்தோ
எழுந்தங்கக் கதிர்கள் என்பேன்.

**அடிமரச் சார்பு**

அடிமரப் பதிவி லெல்லாம்
அடங்கிடும் காட்டுப் பூனை!
இடையிடை ஏற்பட் டுள்ள
பெருங்கிளைப் பொந்தி லெல்லாம்
படைப்பாம்பின பெருமூச் சுக்கள் !
பளிங்குக்கண் ஆந்தைச் சீறல் !
தடதடப் பறவைக் கூட்டம் !
தரையெலாம் சருகின் மெத்தை!

**வௌவால், பழக்குலை, கோது, குரங்கு, பருந்து**

தொலைவுள்ள கிளையில் வௌவால்
தொங்கிடும்: வாய்க்குள் கொண்டு
குலைப்பழம், கிளை, கொடுக்கும்:
கோதுகள் மழையாய்ச் சிந்தும் !
தலைக்கொழுப் புக்கு ரங்கு
சாட்டைக்கோல் ஒடிக்கும்: பின்னால்
இலைச்சந்தில் குரங்கின் வாலை
எலியென்று பருந்தி ழுக்கும் !

**கிளிகள்**

கொத்தான பழக்கு லைக்குக்
குறுங்கிளை தனில்ஆண் கிள்ளை
தொத்துங்கால் தவறி, அங்கே
துடிக்குந்தன் பெட்டை யண்டைப்
பொத்தென்று வீழும்: அன்பிற்
பிணைந்திடும்: அருகில் உள்ள
தித்திக்கும் பழங்கள் அக்கால்
ஆணுக்குக் கசப்பைச் செய்யும் !

**சிட்டுக்கள்**

வானத்துக் குமிழ்ப றந்து
வையத்தில் வீழ்வ தைப்போல்
தானம்பா டும்சிட் டுக்கள்
தழைகிளை மீது வீழ்ந்து,
பூனைக்கண் போல்ஒ ளிக்கும்;
புழுக்களைத் தின்று தின்று
தேனிறை முல்லைக் காம்பின்
சிற்றடி தத்திப் பாடும்.

**குரங்கின் அச்சம்**

கிளையினிற் பாம்பு தொங்க,
விழுதென்று, குரங்கு தொட்டு
"விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல்"
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன் வால் பார்க்கும்.

**பறவை யூஞ்சல்**

ஆலினைக் காற்று மோதும்;
அசைவேனோ எனச்சி ரித்துக்
கோலத்துக் கிளைகு லுங்க
அடிமரக் குன்று நிற்கும்!
தாலாட்ட ஆளில் லாமல்
தவித்திட்ட கிளைப்புள் ளெல்லாம்
கால்வைத்த கிளைகள் ஆடக்
காற்றுக்கு நன்றி கூறும் !

**குயில் விருந்து**

மழைமுகில் மின்னுக் கஞ்சி
மாங்குயில் பறந்து வந்து
"வழங்குக குடிசை" என்று
வாய்விட்டு வண்ணம் பாடக்
கொழுங்கிளைத் தோள் உயர்த்திக்
குளிரிலைக் கைய மர்த்திப்
பழந்தந்து களிப்பாக் கும்பின்
பசுந்துளிர் வழங்கும் ஆலே.

**தமிழ் வழி அரசு - நாமக்கல் கவிஞர்**

தமிழ்மொழி வளர்த்த ஞானம்
தரணியில் பரவி எங்கும்

தமிழ்வழி அரசு நீதி
        தழைத்திட முடியுமானால்
குமிழ்தர உலகை வாட்டும்
        கொடுமைகள் குறையும் ,உண்மை
அமிழ்தினை உண்டா லென்ன
        அனைவரும் சுகித்து வாழ்வோம் 1

சிலம்பினைக் காட்டிக் கேட்ட
        கண்ணகி சீற்றம் கண்டு
குலம்பழி கொண்ட தென்று
        குமுறிய துயரால் நொந்து
நலம்பிழைத் தறத்தைக் கொன்ற
        நாணத்தால் உயிரை விட்ட
தலம்புகழ் மன்னன் காதை
        தமிழுக்கே சொந்த மாகும் 2

கன்றினை மைந்தன் கொல்லக்
        கதறிய பசுவைப் பார்த்தான்
‘ இன்றுனக் குற்ற துன்பம்
        எனக்குறச் செய்வேன் ’ என்று
தன்மகன் உயிரைக் கன்றின்
        உயிருக்கே ஈடாய்த் தந்து
வென்றி கொள் நீதி மன்னன்
        வேறெந்த மொழியில் உண்டு 3

கொண்டவன் அயலூர் போகக்
        குலமகள் தனித்த வீட்டை
அண்டினர் கதவைத் தட்டில்
        கரத்தினை அறுப்போம் என்று
விண்டதை மறந்து செய்த
        குற்றத்தால் விதித்த வாறே
தண்டனை தனக்கே தந்த
        மன்னனும் தமிழ னாகும் 4

திடமிகும் தெய்வ பக்தன்
        தீவிர தேச பக்தன்
கடமையும் தீர வீரக்
        கருணைசேர் கட்ட பொம்மன்
‘அடிமையாய் வாழ மாட்டேன்
        அன்னியர்க் கஞ்சேன் ’ என்று
கொடுமையை எதிர்த்து நின்ற
        கொள்கையும் தமிழன் கூற்றாம். 5

உள்ளமும் உடலும் கூம்ப
        உலகெலாம் வணங்கும் ஜோதி
வள்ளலைக் காந்தி செய்த
        அறந்தரு வாழ்க்கை முற்றும்
தள்ளரும் அறங்க ளாகத்
        தமிழ்த்திருக் குறளில் முன்பே
வள்ளுவன் வாழ்ந்து சொன்ன
        கொலைதவிர் வாய்மையாகும் 6

# கரிக்கிறது தாய்ப்பால்

**ஆரூர் தமிழ்நாடன்**

திருவாரூரைச் சேர்ந்தவர். தமிழ்ப்பற்று மிகுந்தவர். இவருடைய கவிதைகள் பெரும்பாலும் மரபுக்கவிதைகள் ஆகும். ஆனால் ஒவ்வொன்றும் புதுக்கவிதையின் தலையில் அமர்ந்து தர்பார் நடத்துகின்றன. இவருடைய "சிறகுகளாகும் சிலுவைகள் " என்ற தொகுப்பு தன்னம்பிக்கைத் தணல் நமக்கிருந்தால் சிலுவை கூடச் சிறகுகளாகும் என்பதை உணர்த்துகின்றது.

அம்மா
எனக்கு நீ
இருபது வருஷமாய்ப்
பெண் பார்க்கிறாய்
உனது
தேடலின் நீளத்தில்
எனக்குப் பின்
பிறந்த
தம்பிமார்களுக்கும்
தலை நரைத்துவிட்டது.

எனக்குத் தெரியும்
நீ தேடுவது
மணமகளையல்ல
பணமகளை
உன்
நட்டுவாங்கத்திற்கு
ஆடிக்கொண்டிருக்கும்
அப்பாவிடமும்
உன்
உதடுகள் தான்
இருக்கின்றன.
பாவம்
அவரிடம்
சுதந்திர வார்த்தைகளைத்
தேட முடியாது.
உன்
போலிக் கௌரவப்
புழுதிச் சிறைக்குள்
புத்திரக்கைதிகளாய்
நாங்கள்.

தாயே.
புன்னகை அணிந்த
தேவதைகளை விடவும்
பொன்நகை அணிந்த
பொம்மைகளையே
உனக்குப் பிடிக்கும்.

பருத்தியாடைக்குள்
இருக்கும்
பவள மல்லிகைகளை

மறுதலிக்கும் நீ
பட்டு போர்த்திய
சிரங்குகளைக் கூடச்
சிநேகம் சிநேகமாய்
முத்தமிடுவாய் ! .

எங்களுக்கு நீ
பூட்டியிருப்பது
தாய்மைச் சங்கிலிதான்
என்றாலும்
அதுகூட
அடிமன ஆவேசத்தில்
வெடித்துச் சிதறிவிடும்

விலகி நில்
எங்களுக்கான
ராகத்தை
நாங்களே
தேடிக்கொள்கிறோம்.
அம்மா!
அப்போது
நீ ஊட்டிய
தாய்ப்பால்
இப்போது
கரிக்கிறது.

# ஒற்றுமை

**கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை**

ஒற்றுமையாக உழைத்திடுவோம் - நாட்டில்
உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம் ;
வேற்றுமை பேசித் திரியவேண்டாம் - இன்னும்
வீணாய்ப் புராணம் விரிக்க வேண்டாம்.

சாதி இரண்டலால் வேறுளதோ? - ஔவைத்
தாயின் உரையும் மறந்தீரோ?
ஆதி இறைவன் வகுத்ததுவே - மக்கள்
ஆக்கிய கற்பனை தான்இதுவோ?

வீட்டுக்குள் சண்டைகள் போடுவதேன்? - கூரை
வெந்து விழுவதும் கண்டிலிரோ?
நாட்டுக்கு நன்மையை நாடுபவர் - இந்த
நாடகம் ஆடல் நகைப்பலவோ?

மன்னுயிரக்காக முயல்பவரே - இந்த
மாநிலத் தோங்கும் குலத்தினராம்
தன்னுயிர் போற்றித் திரிபவரே - என்றும்
தாழ்ந்த குலத்தில் பிறந்தோர் அம்மா !

# இலக்கிய மும்மணி

வள்ளுவர் தந்த திருமறையைத் - தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே - என்றும்
உத்தம ராகி ஒழுகுவமே.
பாவின் சுவைக்கடல் உண்டெழுந்து - கம்பன்
பாரிற் பொழிந்ததீம் பாற்கடலை
நாவின் இனிக்கப் பருகுவமே - நூலின்
நன்னயம் முற்றுந் தெளிகுவமே.
தேனிலே ஊறிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும் - நிதம்
ஓதி யுணர்ந்தின் புறுவோமே..

# அலகு - 2

## *புலவர் குழந்தை*

பெரியார் மாவட்டத்து மூலவலசு என்னும் ஊரில் 01.07.1906-இல் பிறந்தவர். தனிநிலையில் படித்து சென்னைப் பல்கலைக்கழகப் புலவர் பட்டம் பெற்று நாற்பதாண்டுக் காலம் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். இவர் தமிழ்ப் பற்றும் தமிழர் பற்றும் தமிழ் நாட்டுப் பற்றும் மிக்கவர். நுண்மாண் நுழைபுலம் மிக்கவர். இவர் இயற்றிய இராவண காவியம் இவர் புகழை மேம்படுத்தும் காவியமாகும்.

### *பெரியார் பிறவாதிருந்தால்*

1. பேடைக் குயிலின் மொழியேநம்
பெரியார் பிறவா திருந்திருந்தால்
மூடப் பழக்க வழக்கமெனும்
முரட்டுக் களிறு முதுகிட்டே
ஆடிக் காற்றின் அலர்பூளை
யாமென் றோடத் தமிழ் மக்கள்
கூடிக் குலவிப் புதுவாழ்வு
கூடி யுவத்தல் கூடுங்கொல்?

2. பேதை தணிக்கப் பெயர்ந்தோய்நம்
பெரியார் பிறவா திருந்திருந்தால்
சாதி சமயப் படுகுழியில்
தள்ளப்பட்டுத் தமிழ் மக்கள்
யாது செய்கம் எனவெண்ணா
அயர்ந்தாங் கிருந்த அந்நிலையில்
மீது போத வழிகண்டு
வெளிப்போந் திருத்தல் கூடுங்கொல்?

3. பிறைநேர் நுதல்மான் பிணையேநம்
பெரியார் பிறவா திருந்திருந்தால்
செறிசீ வடிய முடைநாறும்
தீண்டா மையெனும் அக்கொடுநோய்
அறைவீ ழருவிக் கரையே போல்
அலமந் தொழியத் தமிழ்மக்கள்
குறையா தகன்ற மரமேபோல்
நலமுற் றிருத்தல் கூடுங்கொல்?

4. பிடி மென்னடையின் கொடியே நம்
பெரியார் பிறவா திருந்திருந்தால்

உடைமை யிழந்து நகரின்ப
        உரிமை யிழந்து மீளாத
அடிமை யெனும்பாழுஞ் சிறைப்பட்டே
        அயரா நின்ற பெண்ணுலகக்
கொடுமை தவிர்ந்து புதுவாழ்வு
        கூடி யுவத்தல் கூடுங்கொல்?

5. பெண்ணா ரணங்குப் பிழம்பேநம்
        பெரியார் பிறவா திருந்திருந்தால்
மண்ணா மணியா ஒளிவீசி
        வையம் புகழ வாழ்ந்திட்ட
அண்ணா வைப்பெற் றிருப்போமோ
        ஆவ லோடு தமிழரெலாம்
எண்ணா நின்ற தமிழாட்சி
        எய்தி யிருத்தல் கூடுங்கொல்!

## ***கவியரசு கண்ணதாசன்***

இந்த நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவர். 24.06.1927-இல் சிவகங்கை மாவட்டத்திலுள்ள சிறுகூடல் பட்டியில் பிறந்தவர். மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி, தைப்பாவை, அர்த்தமுள்ள இந்துமதம், இயேசு காவியம் ஆகிய படைப்புகள் இவர்தம் புகழை என்றும் பரப்புவனவாகும். உலகளாவிய புகழ்பெற்ற இக்கவிஞர் 17.10.1981 இல் அமெரிக்காவில் அமைதியடைந்தார்.

### ***எல்லாம் நானே!***

எல்லாம் நானே என்பவர் வாழ்க்கை
கல்லாய் மணலாய்க் கனலாய் அழியும்!
புயலாய்ப் புழுவாய்ப் பூமியில் இருப்பினும்
கல்லாத வரும் கனிவுடன் நடந்தால்
நல்லோர் மதிக்க நயம்பட வாழ்வர்!
வல்லோன் நானென வாய்ச்சொல் லடித்து
எல்லோர் வாழ்விலும் இழிவினைப் பரப்பும்
பொல்லா மனிதர் புகழ்கெட்டு மடிவர்!
வெற்றியோ தோல்வியோ விதிப்படி வரட்டும்
உற்றவை எவையென உணர்ந்துகொண் டாடுவோம்
மற்றவை இறைவன் வகுத்தஅவ் விதமே!
கற்றவை குறைவே: கல்லா தனவே
மற்றுஇப் பூமியின் பரப்பள வாகும்!
நாணல் போலவே நாணிப் பணிந்து
தேவைப்பட்டால் தென்னைபோ லிருந்து
மக்கள் மத்தியில் மயில்போ லாடி
குழந்தை களிடையே குயில்போல் பாடி
கோட்டா னாகிக் குரங்கா காமல்
வாழும் மனிதரை வையகம் போற்றும்!
எந்த நேரமும் எகிறிக் குதிப்போர்

சொந்த அறிவு துணைக்கு வராமல்
மந்த அறிவால் மந்தைகளாவார்!
வாழ்வில் எத்தனை மண்ணிடைக் கண்டேன்.
வாழ்ந்து தாழ்ந்தோர் வரலாறு படித்தேன்.
தாழ்ந்து வாழ்ந்தோர் சரித்திரம் பார்த்தேன்.
ஏறும் போதே இறங்கிய சிலபேர்
ஏறாம லேயே இறந்தவர் சிலபேர்
ஏறிய இடத்தை இறுகப் பிடித்து
இறங்கா மலேயே இருந்தவர் சிலபேர்
எத்தனை குதிரைகள்? எத்தனை வண்டிகள்?
எத்தனை யானைகள்? எத்தனை பூனைகள்?
இத்தனை பார்த்தவன் இன்னும் பார்க்கிறேன்!
மமதை என்பது மறையவே இல்லை.
ஆணவம் என்பது அழியவே இல்லை.
ஆணவம் ஒன்றே ஆணுக்கு அவமென
காணும் போதே கனிவுறும் வாழ்க்கை!
சுத்த வீரனாம் தோல்வியைத் தழுவினான்
கோழை என்றார்கள் குன்றத்தில் ஏறினான்!
அவரவர் திறமையா அடிப்படைக் காரணம்?
அங்கே ஒருவன் ஆட்டுவான் ஒன்றை
இங்கே நாமெல்லாம் இயங்கு கின்றோமோ!

## *நா.காமராசன்*

கறுப்பு மலர்கள் என்னும் கவிதைத் தொகுதி மூலம் தமிழக் கவிதை உலகில் அறிமுகமானவர். நா.கா.வின் புல் கவிதை பிரசித்தமானது. தாஜ்மகாலும் ரொட்டித்துண்டுகளும், சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள், மலையும் ஜீவ நதிகளும், ஆப்பிள் கனவு, காட்டுக்குறத்தி போன்றவை இவரது பிற கவிதைத் தொகுப்புகளாகும்.

## *காகிதப் பூக்கள்*

**(அலிகளைப் பற்றிய கவிதை)**

காலமழைத் தூறலிலே
களையாய்ப் பிறப்பெடுத்தோம்
தாய்ப் பாலின் சரித்திரத்தில்
சதுராடும் புதிரானோம்.
விதைவளர்த்த முள்ளானோம்
விளக்கின் இருளானோம்
சதைவளர்க்கும் பிணம்நாங்கள்
சாவின் சிரிப்புகள்
மூங்கையொரு பாட்டிசைக்க
முடவனதை எழுதிவைக்க
முடவன்கை எழுதியதை
முழுக்குருடர் படித்ததுண்டோ?
மூங்கையனின் பாட்டானோம்
முடவன் கை எழுத்தானோம்
முழுக்குருடர் படிக்கின்றார்
சந்திப் பிழை போன்ற

சந்ததிப் பிழை நாங்கள்!
காலத்தின் பேரேட்டைக்
கடவுள் திருத்தட்டும்!
தலைமீது பூவைப்போம்
தாரணியோர் கல்லறையில்
பூவைத்தல் முறைதானே?
பூத்தஉயிர் கல்லறைகள் நாங்கள்!
தாய்ப்பெண்ணோ முல்லைப்பூ
தனி மலடி தாழம் பூ
வாய்ப்பந்தல் போடுகின்ற நாங்கள்
காகிதப் பூக்கள்!

## ***மு.மேத்தா***

மு.மேத்தா புதுக்கவிதை, வரலாற்று நாவல், எனப் பலதுறைகளிலும் புகழ் பெற்றவர். வானம்பாடி இயக்கத்தில் முன்னணியில் இருந்து சாதனைகள் புரிந்தவர். பாவேந்தர் விருது போன்ற பல இலக்கியப் பரிசுகள் பெற்றவர். திரைப்படத் துறையிலும் ஈடுபாடு கொண்டவர். இங்குப் பாடப் பகுதியாக வரும் கவிதை "கண்ணீர்ப்பூக்கள்" எனும் கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

## ***மரங்கள்***

மானுட ஆண்மைக்கு
மண் கொடுத்த சீதனங்கள்
மரங்கள்!

நாங்கள் -
சிறகுத் துடுப்புகள்
செலுத்திச் செல்கிற
படகுப் பறவைகளின்
பயணியர் விடுதிகள்!

எந்தப் பறவைக்கும்
இருக்க இடங்கொடுக்கும்
பொதுவுடமை வீடுகள்!
அதனால்தான் . . ..
தராதரம் அறியாத
தான்தோன்றிப் பறவைகள்
எங்கள் தலைமீதே
எச்சமிட்டுச் செல்கின்றன.

நாங்கள் -
சூடு படுகின்ற
சொந்தக்காரர்களுக்காக
விரித்தே வைத்திருக்கும்
வெண்கொற்றக் குடைகள்!

மழைக்கு ஒதுங்கும்
மர நிலையங்கள்.
சரியாகப் போடாத

சல்லடைப் பந்தல்கள்
பாத சாரிகளின்
பணிமனைக் கூடங்கள்!

மனிதர்கள்
வாங்கி வைக்காத
மண்ணின் விசிறிகள்!

மானுடர் கரங்களில்
அகப்பட்டுக் கொண்ட
மண்ணின் கைதிகள். . . .

அதனால்தான்
ஊருக்கு வெளியே
உட்கார்ந்திருந்தாலும்
எங்கள்
மார்பிலும் தோளிலும்
எண்களை எழுதி
மாட்டிவைக்கிறார்கள்.

நாங்கள்
காற்று மன்னவன்
கால்நடை யாத்திரையைக்
கண்டு முரசறையும்
கட்டியங்காரர்கள்!

தரையில் நடக்கப்
பிரியப்படாத போது
காற்று எங்கள்
தலைகளின் மீதே
நடந்து செல்கிறது !

இரவுக் காற்றின்
ஈர உதடுகளோடு
உறவு கொள்கிறோம் . . .
உலராத எச்சிலைப்
பனித்துளி யாக்கிப்
பரிசளிக்கின்றோம்.

தென்றலின் பார்வையில்
செல்லப் பிள்ளைகள்:
நாங்கள்
புயலின் கண்களில்
புரட்சிக் காரர்கள் !

சட்டையை மாற்றும்
சாரைப் பாம்புகளுடன்
சண்டையிட்டுக் கொண்டோம்

ஆதலால்
காலந்தோறும்
ஒரே உடையை
உடுத்தியிருக்கிறோம் !

காலத்துக்குக் காலம்
எங்கள் உடை
கனமாகி வருகிறது

எங்கள் உடுக்கையை
யாரேனும்
கழற்றவோ
மாற்றவோ வந்தால்
தடுக்க முடியாமல்
கண்ணீர் வடிக்கிறோம்!

வெட்டி யெடுத்தால்
விறகாவோம். . .. வெய்யிலிலே
சுட்டு எடுத்தாலும்
சுறுசுறுப்பாய் அடுப்பெரிப்போம்!

நாங்கள்
கல்லில் எறிந்தாலும்
கம்பில் அடித்தாலும்
பரிசு கொடுக்கின்ற
பண்பின் வார்ப்புகள்!

வானத்தில் நடக்கும்
நட்சத்திர இரவு
விளையாட்டு மேடையில்
தவறி விழுவதைத்
தாங்கிப் பிடிப்பதற்காக
மண்ணில் கட்டிய
வலை விரிப்புகள்!

மனிதர்கள்
தூங்கிய பிறகும்
வானத்தில் விளக்கெரிவது
மரங்களுக்காவே!

# ரிஷி கவிதைகள்

இயற்பெயர் லதா ராமகிருஷ்ணன். 80 களிலிருந்து கவிதை எழுதி வருகிறார். பெரும்பாலான மாற்றிதழ்களில் இவர் கவிதைகள் வெளியாகி இருக்கின்றன. ‘அநாமிகா’ என்ற பெயரில் கதைகளும், ‘ரிஷி’ என்ற பெயரில் கவிதைகளும் எழுதி வருகிறார். மொழி பெயர்ப்புகளும் செய்வதுண்டு.

**முடிந்தது**

பறக்கப் பேராசை !
இதயத்தை சிறகசைத்தசைத்து
சலித்து விட்டது.
கரங்களை விரித்துயரத்
துணிவு வரவில்லை .
பறக்காமல் மரிப்பேன் எனப்
புரிகிறது அறிவுக்கு.
ஆசையைப் பறக்க விடுகிறேன்!

**இங்கே**

ஆடு புலி புல்லுக்கட்டும்
மனிதனுமாய் அவரிவர் . . .
ஆடுபுல் மேய
புலி யாட்டை மேய
ஆள் மேய ஆளிங்கே -
புல் மேயக் காலெங்கே?.

**படைப்பு**

மரத்தில் மட்டுமா Bonzai ?
பல்லி முதலையின்
பூனை புலியின் -
குருவி பருந்தின் -
ஒரு வகையில்
குழந்தை , மனிதனின் . . .
மூர்த்தித்துவம்
கலையா? குரூரமா ?

**மதி**

செல்வழியெல்லாம் சேர்ந்து வருகிறாய் .
நீ நண்பனா? ஒற்றனா?

**தாகம்**

1. அற்றகுளத்து அறுநீர்ப் பறவைகள்
   உறுவிடமறிந்து சிறகு விரிந்து
   இடம் பெயரலாம் .
   நாம் . . . ?

2. முன்னம் குழாய் திறந்தென் தினங்கழிய
   அவர்கள் கிணற்று நீர் இழுத்திருக்க
   குற்றவாளியாயுணர்ந்தேன்.
   இன்று குழாய் கானலாய் நானும் கிணற்றடியில்.
   இன்னும் குற்றவாளியாயுணர்ந்தேன்.

3. குழாய்களுக்குள் சிலந்தி வலைகள்
   இழை குலையாமல் .
   தபஸ் கலையும் அச்சமில்லை பூச்சிக்கு.
   நீர்வரப் பார்க்கும் நம்பிக்கையும்
   வழக்கொழிந்து நாளாயிற்று.
   வைகறை தொடங்கி நூறுமுறை
   கிணற்று நீரை வாளி கழுத்தறுக்க
   வழியத் தளும்பி வருவது
   வியர்வையா? உதிரமா?